# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 76/2017

P.W.4 - மகாலட்சுமி க/பெ.விஸ்வநாதன்

DATE - 22.09.2023

வா.சா.4 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 தரப்பில் குறுக்கு விசாரணை -

என்னுடைய பிரமாண வாக்குமூலத்துடன் நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய மாமனார் என்னிடம் சொல்லியதில் இருந்து தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னுடைய மாமனரின் பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை மூலம் 1990ல் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். என் மாமனாருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களை அவர் உயிருடன் இருக்கும் பொழுதே விற்று விட்டார் என்றால் சரிதான். அவரின் தனிப்பட்ட சொத்துக்களையும் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனாரின் பூர்விக சொத்துக்களில் அவர் விற்றது போக மீதி உள்ள சொத்துக்களில் மட்டும் தான் என் கணவர் பாகம் கேட்க இயலும் என்றால் தவறு. தாவாவில் உள்ள ஏ மற்றும் பி அட்டவனை சொத்துக்களில் 3ல் ஒரு பாகம் என் கணவருக்கு கேட்க எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் ஏற்கனவே விற்ற சொத்துக்களில் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் எந்த விவரமும் தெரியாமல் என் கணவர் கேட்டு கொண்டதன் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

ADJ(FTC),VELLORE